மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஹவுஸ் கமிட்டியைக் கூட்டுகிறேன் என்று சொல்லிவிட்டேன். பிரச்னை தீர்ந்து விட்டது. இப்பொழுது மேலும் வளர்க்க வேண்டாம்.

(3) அறிவிப்பு
மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :

1. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு மதுவிலக்குத் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1979);

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப்பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1979).

(4) உரிமைப் பிரச்னைகள்

(அ) அலைஓசை, முரசொலி, தினகரன் நாளேடுகள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனை.

9-3-1979 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் ஒரு அவையுரிமை மீறல் குறித்த பிரச்சனையை எழுப்பினார்கள். 6-3-1979 அன்று பேரவையில் எழுப்பப்பட்ட சில கோஷங்கள் பேரவைத் துணைத் தலைவரால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தும், 6-3-1979 தேதியிட்ட ''அலை ஓசை'' நாளேட்டிலும், 7-3-1979 தேதியிட்ட ''தினகரன்'' மற்றும் ''முரசொலி'' ஆகிய நாளேடுகளிலும் வெளியிடப்பட்டிருந்தன என்றும், இது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். உரிமை மீறல் பிரச்சனை பத்திரிகைகள் மீது இருப்பதால், அப்பத்திரிகைகளுக்கு எழுதிக் கேட்டு, பின்னர் என் தீர்ப்பை வழங்குவதாக நான் அறிவித்திருந்தேன்.

இப்பிரச்சினை குறித்துக் கேட்டதற்கு, ''அலை ஓசை'', ''தினகரன்'' நாளேடுகளின் ஆசிரியர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளனர்.

1979 மார்ச் 19] [பேரவைத் தலைவர்]

அலை ஓசைதங்களது 9-3-79 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றோம். அதில் தாங்கள் கேட்டுக் கொண்டவாறு, அலை ஓசை பத்திரிகை மீது எழுப்பப்பட்டுள்ள பிரச்சனை குறித்துக் கீழ்க் கண்ட விளக்கத்தை தருகின்றோம்.

''சட்ட மன்ற நடவடிக்கைகளை அதிக அளவு எங்களுடைய பத்திரிகையில் வெளியிட்டு வருகின்றோம். அதில் பேரவைத் தலைவர் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது என்று நீக்கிவிடும் பகுதிகளை எங்கள் பத்திரிகையில் இடம் பெற்று விடாதபடி பார்த்துக் கொள்வதிலும் மிகுந்த அக்கறையோடு இருக்கின்றோம். 6-3-79 அன்று நடந்த பேரவைக் கூட்டத்தின் போது துணைத் தலைவர் அவர்கள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கிய பகுதிகள் எங்கள் பத்திரிகையில் மட்டுமல்லாமல் தினகரன், முரசொலி போன்ற பத்திரிகைகளிலும் வெளி வந்திருப்பது குறித்து உரிமைப் பிரச்சனை எழுப்பப்பட்டுள்ளது. தினமணி போன்ற ஏடுகள் கூட அன்று சட்டப்பேரவையில் துணைத் தலைவர் பேசியது சரியாகக் காதில் விழவில்லை என்றும் வெளியிட்டிருக்கின்றன. அன்றைய தினம் தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளும், அதன் காரணமாக எழுப்பப்பட்ட முழக்கங் களுக்கு இடையே துணைத் தலைவர் அவர்களின் தீர்ப்பு சரியாக அனைவரின் காதுகளிலும் விழுந்திருக்க இயலாது என்பதும் அனைவரும் உணர்ந்து கொள்ளக்கூடிய ஒன்றாகும். துணைத் தலைவர் அவர்களுக்கே தன்னுடைய உத்திரவு அனைவரின் காதுகளுக்கும் கேட்டிருக்காது என்ற வகையில் தான் அவர்கள் சபையிலிருந்து வெளியே செல்கையில் பேரவைத் தாழ்வாரத்தில் சில பத்திரிகை நிருபர்களிடம் அவையில் அவர் என்ன கூறினார் என்பதைத் தெரிவித்துள்ளார். அப்போது எங்கள் பத்திரிகை நிருபர் யாரையும் அழைக்கவும் இல்லை. அதற்குப் பிறகும் அவைத் தலைவர் அலுவலகத்தி லிருந்தோ அல்லது செய்தித்துறை அலுவலகத்திலிருந்தோ எங்களுக்கு அதுபற்றி செய்தி அறிவிக்கப்படவில்லை. ஆகவே, அவைத் தலைவரின் தீர்ப்பு வேண்டுமென்றே மீறப்படவில்லை. என்பதைத் தெளிவாக்குவதோடு உரிமை மீறிய செயல் எதையும் நாங்கள் செய்யவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கி றோம்.'

முரசொலி நாளேட்டின் ஆசிரியரும் மேற்கண்டவாறே விளக்கம் அளித்துள்ளார்.

''தினகரன்'' நாளேட்டின் விளக்கம். 'தங்களது 9–3–79 தேதியிட்ட கடிதம் கிடைத்தது,

'தினகரன்' மீது எழுப்பப்பட்டுள்ள உரிமைப் பிரச்சனைபற்றிக் கீழ்க்கண்ட விளக்கத்தைத் தருகிறோம்.

சட்டமன்றப் பேரவை நடவடிக்கை செய்தி அதிக அளவு தினகரனில் வெளியிட்டு வருகிறோம் என்பது தாங்கள் அறிந்ததே. பேரவைத் தலைவர் அவைக் குறிப்பில் இருந்து நீக்கி உத்தர விடும் பகுதிகள் எங்கள் பத்திரிகையில் இடம் பெற்றுவிடாத படி பார்த்துக்கொள்வதில் மிகுந்த கவனத்துடன் இருந்து வருகிறோம்.

6-3-1979 அன்று நடந்த பேரவைக் கூட்டத்தில் பேரவைத் துணைத் தலைவர் அவைக் குறிப்பில் இருந்து நீக்கிய பகுதி தினகரனில் பிரசுரிக்கப் பட்டிருப்பதாக உரிமைப் பிரச்சினையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்று வழக்கத்துக்கு மாறாக எழுப்பப்பட்ட முழக்கங் களுக்கு இடையே நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்த நேரத்தில் பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பு கேட்காமல் போய் விட்டது. தவிர அவைத் தலைவர் அலுவலகத்தில் இருந்து எங்களுக்கு இதுபற்றி செய்தி எதுவும் அறிவிக்கப்படவும் இல்லை. ஆகவே, பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பு வேண்டும் என்றே மீறப்படவில்லை என்பதை விளக்குவதுடன் சட்டமன்றப் பேரவையில் உரிமை மீறிய செயல் எதையும் செய்யவில்லை என்பதையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விளக்கங்கள் ஏற்கப்படக் கூடியனவாக இல்லை.

6-3-79 அன்று அவை நடவடிக்கைகள் 11-40 மணி அளவில் ஒருமுறை ஒத்திவைக்கப்பட்டு, அவை மீண்டும் 12-05க்குக் கூடி, மறுபடி அவையில் ஏற்பட்ட கூச்சல் குழப்பம் காரண மாக அவை மறுநாள் வரை ஒத்திவைக்கப்பட்டது.

அன்றைய நடவடிக்கைகளை மீண்டும் ஒருமுறை பார்வை யிட்டேன். 11-20 மணி அளவிலேயே பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் "திரு. உமாநாத் அவர்கள் இனிமேல் பேசுவது அனைத்தையும் கூட அவை நடவடிக்கைக் குறிப்பி லிருந்து நீக்கப்பெறும் என்று உத்தரவிடுகிறேன்" என்று கூறியுள்ளார். பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இவ்வாறு எச்சரித்தும் திரு. உமாநாத் அவர்கள் கேளாமல் பேசியதால் 11-25 மணி சுமாருக்குப் பேரவைத் துணைத் தலைவர் கீழ்க் கண்ட உத்தரவினை பிறப்பித்துள்ளார்—"நான் பேசக்கூடாது. என்று சொல்லியதிலிருந்து திரு. உமாநாத் தொடர்ந்து பேசியது அனைத்தையும் நீக்க உத்தரவிடுகிறேன்." இதற்குப் பின்தான் திரு. உமாநாத் அவர்களும் அவரது கட்சியைச் சார்ந்தவர் களும் மற்றவர்களும் கோஷங்களைக் கிளப்பினார்கள். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு 15 நிமிடங்கள் அவை நடந்தபின் அவை ஒத்திவைக்கப்பட்டது.

1979 மார்ச் 19] [பேரவைத் தலைவர்]

எனவே, ''கூச்சல் குழப்பத்திற்கிடையே பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் உத்தரவிட்டது தாங்கள் கேட்க முடிய வில்லை'' என்று பத்திரிகைகளின் ஆசிரியர்கள் குறிப்பிட்டிருப்பது ஏற்கக் கூடியதாக இல்லை. அவ்வாறு கேட்க முடியாமற் போயிருந்தாலும், அவையில் ஏற்பட்ட குழப்பத்தினைப் பயன் படுத்திக் கொண்டு, பேரவைத் தலைவரின் தீர்ப்பு தங்களுக்கு கேட்கவில்லை என்று கூறுவது சரியல்ல. அவைத் தலைவரின் தீர்ப்பு விளக்கமாக இல்லை, அல்லது பத்திரிகை நிருபர்களுக்கு கேட்கவில்லை என்றால், அந்த நிருபர்கள் அவைத் தலைவரையோ அல்லது பேரவைச் செயலாளரையோ அணுகி பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்துத் தேவையான விளக்கம் பெறவேண்டும். பேரவையின் நடவடிக்கைகளைச் சரியானபடி வெளியிடுவதற்கு இவ்வாறு செய்வது அந்த நிருபர்களுடைய கடமையாகும். மேலும் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அன்று பேரவையைவிட்டு வெளியே போகும்போது, பல்வேறு பத்திரிகைகளைச் சேர்ந்த நிருபர்கள் அவரிடம் சென்று விளக்கம் கேட்டுள்ளனர். சில நிருபர்கள் செல்லவில்லை என்றால் அது அவர்களுடைய தவறு. பத்திரிகை நிருபர்கள் இம்மாதிரி நேரங்களில் அழைக்கப்படுவதில்லை. அவைத் தலைவர் தீர்ப்பு என்ன என்பதைத் தெரிந்துகொள்வது அவர்களது கடமை என்பதை மறுபடி வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

எனவே எழுப்பப்பட்ட பிரச்னையில் அவை உரிமை மீறல் இருக்கிறது என்றாலும். இதுவே முதல் முறையாக இருப் பதால், பத்திரிகை நிருபர்களை எச்சரித்துவிட்டு, மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாமல் இப்பிரச்சனையை முடித்துவிடலாம் என்று நான் கருதுகிறேன்.

[முற்பகல் 10-20]

(ஆ) மின்சாரத்துறை அமைச்சர் மீது—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. நேற்றைய முன்தினம் 17—3—79 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களும் திரு. உமாநாத் அவர்களும் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்னையை அவையில் எழுப்பினார்கள். இது குறித்து மாண்புமிகு மின்சராத்துறை அமைச்சர் அவர்களும் தம் விளக்கத்தை அளித்துள்ளார்கள். இதன் மீது என் தீர்ப்பை இன்று வழங்குவதாக நான் அறிவித்தி ருந்தேன்.

ஒரு குறிப்பிட்ட பிரச்னையில் வழக்குரைஞர்கள் சங்கம் தம் இசைவை அளித்தது, அல்லது அந்தச் சங்கத்தை கேட்டு, அதன் கருத்தை அறிந்து அரசு முடிவு செய்தது என்று மாண்புமிகு அமைச்சர் 'வர்கள் அறிவித்தார்கள் என்றும்,